## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 166/2024

Prosecution witness for P.W.23

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி.ராஜேஸ்வரி | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.08.2025.

Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது எட்டையபுரம் அரசு மருத்துவமனையில் மருத்துவ அலுவலகராக பணியில் இருந்து வருகிறேன். நான் 01.04.2024 அன்று அதே மருத்துவமனையில் இரவு 9 மணியளவில் பணியில் இருந்த போது ஆர்.கே.துரை என்பவரின் பிரேதத்தை காவலர் பாண்டியராஜ் என்பவர் இலவச அமரர் ஊர்தி மூலமாக மருத்துவமனைக்கு கொண்டு வந்தார். நான் அவரை பரிசோதித்த போது தலையில் சிதைந்த காயமும், உடல் முழுவதும் பலதரப்பட்ட காயங்களும் ஏற்பட்டு இறந்த நிலையில் கிடந்தார். அதை விபத்து பதிவேட்டில் பதிவு செய்து பிரேதத்தை சவகிடங்கிற்கு அனுப்பினேன். மேற்படி பிரேதம் குறித்து நான் வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் **அ.சா.ஆ–23.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

அ.சா.ஆ–23ல் 108 என்ற எண் அடிக்கப்பட்டுள்ளது என்றும் 01.04.2024 என்ற தேதியில் 1 என்பது அடித்தலோடு எழுதப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரிதான். அந்த தேதியில் 2 என்று எழுதப்பட்டு பிறகு 1 என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரேதத்துடன் காவலரும் அமரர் ஊர்தி ஓட்டுநரும் தவிர வேறு யாரும் வரவில்லை என்றால்

சரிதான். இறந்தது யார் என்று தெரியாததால் பிரேதத்தை பிணவறையில் வைக்க வேண்டும் என்று மருத்துவமனையில் ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ–23 ஆவணத்தை ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வழக்கிற்கு ஏற்றவாறு 2ம் தேதியில் தயாரித்து 1ம் தேதிக்கு முன் தேதியிட்டு தயாரித்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் தேதி அடித்தலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.ஆ–23 உண்மை தன்மை அற்றது என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை விசாரித்ததாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 1,3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.08.13 17:43:37 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 166/2024

Prosecution witness for P.W.22

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. சுரேஷ் விஸ்வநாதன்** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.08.2025.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 2 ஆக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு கோவில்பட்டி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் ஆய்வாளர் நிலை 2 ஆக பணியில் இருந்து வந்து, 27.05.2024 அன்று எட்டையபுரம் காவல் நிலைய குற்ற எண்.85/2024 இ.த.ச.279, 304 ஏ, மாற்றம் செய்யப்பட்ட பிரிவுகள் 302, 114 இ.த.ச படியான வழக்கில் TN 21 AK 3792 என்ற பதிவெண் கொண்ட சரக்கு வாகனத்தை(லாரியை) எட்டையபுரம் காவல் நிலையத்தில் வைத்து ஆய்வு செய்தேன். அந்த வாகனத்தில் விபத்து சேதம் எதுவும் இல்லை. அன்றே அதே வழக்கில் சம்மந்தப்பட்ட TN 96 C 9002 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை மேற்படி நிலையத்தில் வைத்து ஆய்வு செய்தேன். இருசக்கர வாகனத்தில் முகப்பு விளக்கு அசெம்பிளி, முன்பக்க போர்க், வாகனத்தின் இருபுறம் உள்ள பைபர் பாடி, முன் பின் பக்க சக்கரங்களின் அசெம்பிளி, செயின் கவர், கியர் லிவர், பின் பக்க மட்கார்டு ஆகியவை சேதம் அடைந்திருந்தது. இரண்டு வாகனங்களுக்கும் இயந்திர கோளாரின் காரணமாக விபத்து ஏற்படவில்லை என்று நான் அளித்த மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.சா.ஆ.21 மற்றும் 22. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

மேற்படி சான்றிதழ்களும் 27.05.2024ல் வழங்கப்பட்டன என்றால் சரிதான். அவற்றை 27.05.2024 அன்று ஒரு காவலர் வாங்கி சென்றார்.

அ.சா.ஆ–21, 22 சான்றிதழ்களை காவலர் பெற்று சென்ற பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ–21ல் லாரிக்கு விபத்து சேதம் எதுவும் இல்லை என்று 10வது காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ–21ன் படி நான் ஆய்வை முழுமையாக செய்தேன். என்னுடைய அறிக்கையின் படி மேற்படி லாரி விபத்துக்குள்ளானதற்கான எந்த அறிகுறியும் சேதங்களும் லாரியில் இல்லை என்பதால் மேற்படி சான்றிதழிலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். லாரியை இருசக்கர வாகனம் மாட்டி சுமார் 500மீ இழுத்து செல்லப்பட்டால் லாரியில் விபத்து சேதம் இருக்கும் என்றும் சாலையில் இருசக்கர வாகனம் உரசியதற்கான அடையாளமும் இருக்கும் என்றும் சொன்னால் சரிதான். அ.சா.ஆ–21,22ஐ நான் 30.06.2024ல் வழங்கவில்லை. மேற்படி வாகனங்கள் காவல் நிலையத்தில் நிலையாக வைக்கப்பட்டிருந்த நிலையில்தான், நான் ஆய்வு செய்து சான்றிதழ் வழங்கினேன் என்றால் சரிதான்.

மேற்படி குறுக்கு விசாரணை 1,3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நீதிமன்ற கேள்விக்கான பதில்–

மேற்படி இரண்டு வாகனங்கள் எந்த தேதியில் காவல்நிலையத்திற்கு எடுத்து செல்லப்பட்டது என்று எனக்கு தெரியாது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.08.13 17:43:54 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 166/2024

Prosecution witness for P.W. 24

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. பிரியங்கா | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.08.2025.

முதல் விசாரணை

நான் தற்போது ராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இளநிலை உள்ளிருப்பு மருத்துவராக பணியில் இருந்து வருகிறேன். நான் கடந்த 02.04.2024 அன்று எட்டையபுரம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது காலை சுமார் 9.30 மணியளவில் ஆர்.கே.துரை என்பவரின் பிரேதத்தை உடற்கூறு ஆய்வு செய்வதற்காக ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்துடன் காவலர் சசிக்குமார் வந்து பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதத்தை கொடுத்தார். நான் பிரேத அடையாளங்களை குறித்து கொண்டு காலை சுமார் 9.40 மணியளவில் பிரேத பரிசோதனையை ஆரம்பித்தேன். பிரேதத்தில் பிரேதம் முழுவதும் பிணவிரைப்பு தன்மை இருந்தது. தலை மற்றும் முகம் நசுங்கியும் சிதைந்தும் காணப்பட்டது. வலது காது மற்றும் கண்ணம் தெளிவாக காணப்பட்டது. பற்கள் உடைந்து காணப்பட்டது. வலது கண்ணத்தில் 10x5 cm அளவுள்ள சிராய்புடன் கூடிய கன்றிய காயங்கள் காணப்பட்டது. வலது பக்க கழுத்தில் 6x5cm அளவுள்ள சிராய்பு காயம் இருந்தது. இடது தோள்பட்டையில் 15x20cm அளவுள்ள சிராய்பு காயம் இருந்தது. இடது முன்

கையில் 15x5cm அளவுள்ள சிராய்பு காயம் இருந்தது. இடதுகை விரல்களில் 2,3,4 விரல்கள் உடைந்தும், விலகியும் காணப்பட்டது. விரல்களை சுற்றியுள்ள தோள் உரிந்த நிலையில் காணப்பட்டது. இடது மேல் கையில் முன்புறம் மற்றும் பக்கவாட்டு பகுதியில் கண்றிய காயத்துடன் கூடிய சிராய்பு காயம் 12x8cm அளவில் காணப்பட்டது. இடது முன் கையின் பின்பகுதியில் 10x4cm அளவுள்ள சிராய்பு காயம் இருந்தது. வலது தோள்பட்டையில் 5x2cm அளவுள்ள சிராய்பு காயம் இருந்தது. வலது முன்கையின் பக்கவாட்டு பகுதியில் 20x6cm அளவுள்ள சிராய்பு காயம் இருந்தது. வலது கை மற்றும் 5 விரல்களிலும் பல்வேறு சிறிய சிராய்பு காயங்கள் இருந்தன. மார்பு பகுதியில் 6x3cm அளவுள்ள சிராய்பு காயம் இருந்தது. வயிற்று பகுதி மற்றும் மார்பு பகுதியில் நேர்கோட்டு வடிவிலான சிராய்பு காயங்கள் இருந்தது. சிராய்பு காயங்கள் முதுகு பகுதி முழுவதும் இடுப்பு பகுதி வரையில் காணப்பட்டது. இடது பக்க இடுப்பின் முன்பகுதியில் சிதைந்த காயம், 12x3x1.5cm அளவில் காணப்பட்டது. இடது தொடையின் பக்க வாட்டு பகுதியில் 10x4x3cm அளவுள்ள சிதைந்த காயம் காணப்பட்டது. இடது தொடைஎலும்பு உடைந்த நிலையில் காணப்பட்டது. இடது காலின் உட்பகுதியில் 12x4x4cm அளவுள்ள சிதைந்த காயம் உட்பகுதியில் எலும்பு வெளியில் தெரிந்த நிலையில் காணப்பட்டது. இடது கணுக்காலில் 3x2x2cm அளவுள்ள சிதைந்த காயம் காணப்பட்டது. வலது முழங்காலில் 5x4cm அளவுள்ள சிராய்பு காயம் இருந்தது. வலது பாதத்தின் மேல் பகுதியில் 7x4cm அளவில் சிராய்பு காயம் இருந்தது. ஆழமான சிராய்பு காயம் வலது குதிங்காலில் 10x5cm அளவில் காணப்பட்டது. மார்பு பகுதியில் இருபுறமும் 2 முதல் 8 விலாஎலும்புகள் உடைந்த நிலையிலும் அதற்கு மேல் இருந்த தசை பகுதிகள் கண்றியும் காணப்பட்டது. இருதயம் வெளிறிய நிலையில் இருதய அறைகள் காலியாகவும் காணப்பட்டது.

இருபக்க நுரையீரல்களிலும் சிதைந்த காயத்துடன் கூடிய கன்றிய காயம் காணப்பட்டது. நாவடி எலும்பு இயல்பாக இருந்தது. வயிறு காலியாக இருந்தது. கல்லீரல் மற்றும் மண்ணீரல் சிதைந்த நிலையில் இருந்தது. சிறுநீரகம் வெளிறிய நிறத்தில் இருந்தது. சிறுநீர் பை காலியாக இருந்தது. பல்வேறு கூட்டு எலும்பு முறிவுகள் கபாலம் முழுவதும் காணப்பட்டது. மூளை இல்லாமல் இருந்தது. மூளையை சுற்றியுள்ள சவ்வு கிழிந்து காணப்பட்டது. மேற்படி நபர் அவருக்கு ஏற்பட்ட பல்வேறு காயங்களினாலும் அதனால் ஏற்பட்ட இரத்தபோக்கினாலும் மற்றும் அதிர்ச்சியினாலும் பிரேத பரிசோதனைக்கு முன்பாக 12 முதல் 18 மணி நேரத்திற்குள் இறந்திருக்க கூடும் என்று கருத்து தெரிவித்து நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ–24. அதில் என் இறுதி கருத்துரையும் வழங்கியுள்ளேன் அந்த கருத்துரை அ.சா.ஆ–25. ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது ஒரு லாரியால் மோதினால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது லாரி மோதி இருசக்கர வாகனத்துடன் அந்த நபர் கொஞ்ச தூரம் இழுத்து செல்லப்பட்டால் மேற்படி சிராய்பு காயங்கள் மற்றும் சிதைந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

மேற்படி பிரேதம் 75 முதல் 85 கி எடை வரை இருக்கலாம். பிரேதத்தின் தோராயமான உயரத்தையும் எடையையும் நான் அ.சா.ஆ–24ல் குறிப்பிடப்படவில்லை. Well Nurished என்ற வார்த்தை ஒட்டிய கண்ணம் இல்லாமல் எலும்போடு ஒட்டிய தோள் இல்லாமல் இருக்கும் நபரை குறிப்பிடும் என்றால் சரிதான். 4வது மாதம் என்பது கடுமையான கோடை காலம் என்றால் சரிதான். அதனால் இந்த வழக்கு சம்பவம்

ஏற்பட்டதாக சொல்லப்படும் பகுதியில் பிண விறைப்பு தன்மை என்பது அதிக நேரம் இருக்கும் என்றால் தவறு. மேற்படி பிரேதம் முழுமையாக சேதமடைந்த பிரேதம். பிரேதம் முழுவதும் காயங்கள் இருப்பதால் பிரேதம் சீக்கிரம் அழுக ஆரம்பித்துவிடும் என்றால் 12 மணிநேரத்திற்குள் பிரேதம் அழுகாது. நசுங்கிய உடலுக்கும் இயற்கை மரணம் அடைந்த உடலுக்கும் அழுகும் நேரம் வித்தியாசப்படும் என்றால் அப்படி வித்தியாசம் இருக்குமா என்று எனக்கு தெரியவில்லை. நான் வழங்கியுள்ள அ.சா.ஆ.24 படி மேற்படி நபர் 01.04.2024 அன்று இரவு சுமார் 8 மணியளவில் இறந்திருக்கலாம் என்றால் சரிதான்.

மேற்படி குறுக்குவிசாரணை 1,3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.08.13 17:44:16 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.